போர்வாள்

வாள் 3] 24-6-50 [வீச்சு 42



வெள்ளையர் ஆட்சியின்போது 12 அவுன்ஸ் இருந்த அரிசிப் பங்கீடு, பிரகாசம்காரு காலத்தில் 10 அவுன்சாகக் குறைந்து, ஓமந்தூரார் சகாப்தத்தில் 8 அவுன்ஸ் ஆக மாறி, இப்போது கனம் குமாரசாமியார் ஆட்சியில் 7 அவுன்சாக முடிந்துள்ளது. ஆளவந்த அருங்குணக் குன்றுகள், மக்களுக்குச் செய்துள்ள மகத்தான நன்மை இது!

ஆசிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A. (HONS)

விலை 2 அணா

Best copy available.

மரண சாசனம்

[இளவழகன்]

குளிர் நிலவு கண்ணுக்கு. தேன் சுவை வாய்க்கு. தெவிட்டாத இன்பம் உள்ளத்திற்கு. தென்றல் உடலுக்கு. அவள் அழகுக் கன்னி, பெயர் பாலா.

இன்பமுகம், அன்புப்பார்வை, அழகு நடை—அவன் அறிவுக் கண்ணன். பெயர் மணியன்.

அவர்கள் இணைந்த ஜோடி—பாலாவும் மணியனும்தான். நான் நேரில் கண்டது அவர்கள் அழகையும் அன்பையும்தான். அவர்கள் பெயரையும், பிறவற்றையும் பின்னர் அறிந்தேன். அவர்கள் சற்று தூரத்தில் பாதையோரம் நடந்து வந்துகொண்டிருந்தார்கள். நான் நடைபாதையில் நின்று, அவர்கள் ஜோடி அழகிலே, சோபித்த அன்பிலே இன்பத்தைப் பருகிக்கொண்டிருந்தேன். நான் நின்ற இடத்தருகில் ஏழை நொண்டிப் பிச்சைக்காரன் ஒருவன் கதறிக்கொண்டிருந்தான்.

"ஐயா, சாமி, ஒரு ஏழை ஒத்த கால்லே நிக்கிறேனய்யா. ஒரு காலணா போடுங்கோ"

"ஐயா! ஓடி ஆடி பொழைக்க முடியலே ஐயா. கொம்புகுச்சி புடிச்சி கையெல்லாம் ஆணி ஏறிப்போச்சுங்க, ஐயா! ஐயா! ஒரு காலணா உங்களுக்கு வெத்திலை செலவு. இந்த ஏழை வவுத்துக்கு ராத்திரி சாப்பாடு. எனக்கு தந்தைதாய் இல்லிங்க. நீங்கதான் எனக்கு தாய்தந்தை. ஐயா! ஒரு காலணா போடுங்க. வண்டிமாடு ஓட்டி பாடுபட்டு பொளச்சவனுங்க. அனாதை ஆயிட்டேனுங்க. ஐயா! ஒரு காலணா"

இது அந்த ஏழையின் அவலக் குரல். பாதையோரம் நடந்து வந்த வாலிபனும், வனிதையும் அந்த நொண்டிக் கிழவனை நெருங்கியதும் சற்று நின்றார்கள். இரக்கத்தால் வாலிபனின் குளிர்முகத்தில் லேசாகச் சலனம் தோன்றியது. கிழவன் அந்த வாலிபனை உற்றுப்பார்த்தான். அவன் முகத்தில் மின்னல் ஒளி படர்ந்தது. வாலிபன் அந்த ஏழைக்கு ஓர் அரை ரூபாய் காசைக் கொடுத்தான். நான் ஆச்சரியமுற்றேன். இதற்குள் ஒரு டிராம் வந்தது. அந்த ஜோடி அதில் ஏறிக்கொண்டார்கள். நான் அந்த ஏழைக் கிழவனுக்கு ஓரணா வைத்தந்துவிட்டு வண்டி ஏறிச் சென்றேன்.

"சாமி" என்று கிழவன் என்னை அழைத்தான். நான் பின் தங்கினேன். வண்டி புறப்பட்டது. வாலிபனும், மங்கையும் எங்களையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். வாலிபனின் முகத்தில் சற்றுமுன் தோன்றிய சலனக்குறி மாறவேயில்லை. வண்டி மறைந்தது. நான் கிழவனை நெருங்கினேன்.

"சாமி! என் சோகக் கதையைக் கேட்கிறீர்களா? அதோ, வண்டியில் போகிறானே அவன்தான் என் மகன்" என்றான் கிழவன். எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

நான், "தாத்தா! என்ன சொல்கிறாய்?" என்றேன் திகைப்போடு.

கிழவனின் கண்களில் நீர் துளித்தது. அவன் சொன்னான்: ஆமாம், அவன் என் மகன்தான். அவனுக்கும் அவன் தாய்க்கும் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் நான் துரோகம் செய்தேன். அதன் பயனைத்தான், இதோ, இன்று அனுபவிக்கிறேன். என் மனைவியை நான் மிகுந்த குடிப்பழக்கத்தால், கெட்ட நடத்தையால் விட்டுப் பிரிந்தபோது, அவள் இரண்டுமாதம் கருத்தரித்திருந்தாள். அவள் கட்டிக்கரும்பு. காதகன் நான் என் கண்ணுக்கு அழகாய்த் தெரிந்த வேறு ஒருத்தியோடு ஓடிப்போனேன், ஒருநாள் இரவு.

அப்போது நான் சொந்தமாக ஒருமளிகைக்கடை நடத்திக்கொண்டிருந்தேன். குடிப்பழக்கமும், குதிரைப் பந்தயமும் என்னைச் சூறையாடின. என் கடை ஏலம் போயிற்று. கடன்காரர்களுக்குக் கொடுத்த பணம்போக என் கைக்கு நூறு ரூபாய் கிடைத்தது. என் கடை ஏலம்போன அன்று குடித்துவிட்டு இரவு நெடுநேரம் ஊர் சுற்றினேன். பிறகு வீடு சென்றேன். என் மனைவியைத் திட்டினேன், அடித்தேன். அவள் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைப் பிடுங்கிக் கொண்டேன். வீட்டைவிட்டு வெளியேறினேன். கட்டுப்பாடற்ற களிப்பிலே மிதக்க! அந்தக் கடுமையான பிரிவிலேயும் அவள் என்மீது பரிவுகாட்டினாள். கண்ணீரும், கம்பலையுமாகக் காட்சி தந்தாள். என் நெஞ்சு இரங்கவில்லை. "நான் போகிறேன் போடி" என்று கூறிவிட்டு வெளியேறினேன்.

பிறகு என் 'ஆசை மனைவி'யைச் சந்தித்து அவளோடு சீரங்கத்துக்குப் போனேன். அந்த என் சொந்த மனைவியின் தங்கச்சங்கிலியை விற்றேன், எனக்குவந்த மனைவியோடு வாழ. எங்கள் கையிலிருந்த பணத்தைக்கொண்டு, நானும், என் ஆசை மனைவியும் சீரங்கத்தில் புருஷன் மனைவி என்று கூறிக்கொண்டு ஒரு வீட்டில் ஆறுமாத காலத்தை ஓட்டினோம். எங்களிடம் இருந்த பணம் கரைந்ததும், எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டோம். நான் வாழ்வின் தாழ்வில் உழன்று உருமாறி, உளமுடைந்து பிழைக்கப் புதிய வழி ஒன்றைக் கண்டேன். ஆசை மனைவியோடு சீரங்கத்துக் கோயிலில் பிச்சையெடுத்துக் காலந்தள்ளினேன்.

ஒருநாள் நானும், அவளும் சீரங்கத்து ரங்கராஜர் கோவில் குளத்தருகே தூங்கிக்கொண்டிருந்தோம். விடியற்காலைமூன்று மணிக்குகுளிக்கப்போன என் ஆசைமனைவி மீண்டும் திரும்பவேயில்லை. காலையில் எழுந்த நான், குளத்துப் படியில் அவள் புடவையைக் கண்டேன். குளத்தில் உயிரற்ற அவள் சவம் மிதப்பதைக் கண்டேன். அவள் இறந்துபோனாள் — என்னைவிட்டு ஓடி மறைந்துவிட்டாள் என்பதை உணர்ந்துகொண்டேன். அன்றைய தினத்திலிருந்து நான் உயிருள்ள பிணமானேன். எங்கெங்கோ அலைந்தேன். கொஞ்சநாள் வண்டிஓட்டி சம்பாதித்தேன். ஒருநாள் வண்டி ஓட்டிக்கொண்டு போகும்போது, பாதையில் எதிரே

(16-ம் பக்கம் பார்க்க)

"சோமநாதபுர வீழ்ச்சி"

[சரிதம் தழுவிய கற்பனைச் சித்திரம்]

தொகுத்தோன்: கு. தஙாபாலன்.

அங்கம்: 3.

இடம்: குளத்தங்கரை— பெண்களின் உரையாடல்.

தங்கம்: ஏண்டி அந்த சாமி யாரு முகத்தை பாத்தியா! எவ்வளவு செகசோதியா இருந்தது!!

1வது பெண்: அதை கேக்கணுமா. நான் அவரு சக்திக்கு உங்களுக்கு ஒண்ணு சொல்றேன் கேளுங்க! நான் முதல்லே போகும்போதே சாமீ, எனக்கு வீட்டிலே போனதும், ஏற்கெனவே சண்டைபோட்டுகிட்டிருக்கிற எம் புருசன், சந்தோசமா பேசும்படி செய்யனும்னு வேண்டிகிட்டு, நான் வூட்டுக்கு போனதும எம் புருசன் ஓடியாந்து கட்டிபுடிச்சிகிச்சி!!

2வது பெண்: ஏண்டி, சும்மா கட்டிதானா புடிச்சாரு? முத்தங்கூட கொடுத்தாருன்னு எம் பொண்ணு வந்து சொன்னாளே! (எல்லோரும் சிரித்தல்)

1வது பெண்: போங்கடிஉங்களுக்கு எப்போ பாத்தாலும் கேலிதான். (நாணத்துடன்)

(பிராமணன் ஒருவன் வருகிறான். அனைவரும் வணங்குகின்றனர். அவன் ஆசீர்வதிக்கின்றான்)

பிரா: ஹி, ஹி, ஹி. நீங்களெல்லாம் மஹாலக்ஷ்மியன்னோ! இன்னிக்கி ஸ்வாமிகளை தரிசிக்க ஆஸ்ரமத்திற்கு வருவீரன்னோ?

தங்: அதெப்படி சாமி வராம இருக்க முடியும்?

பிரா: இன்னொரு அதிசயம் கேட்டேளோ!

தங்: என்னா சாமி?

பிரா: நம்ம ஸ்வாமிஜீ, ஆஸ்ரமம் இருக்கோல்லியோ!

தங்: ஆமாம்......

பிரா: அதுக்கு அடுத்தாப்போல கொஞ்ச தூரத்திலே மூப்புர மெரித்தவன், என்னப்பன் ஸ்ரீ கைலாசநாதன், லிங்க வடிவமாக பூமிக்குள்ளே ஜெனித்திருப்பதாக நேற்று ராத்திரி ஸ்ரீமந் நாராயணனே நேக்கு ஸ்வப்பனத்திலே வந்து சொன்னார். அங்கு ஆலயம் ஒண்ணு எழுப்பிட்டா......நாமெல்லோரும் பகவானை விஸ்ராந்தியா........தரிசிக்கலாமன்னோ?

1வதுபெண்: ஆமாம், ஆமாம் சாமி!!

பிராம: ஆகவே, சாயரக்ஷ பூஜைக்கு நீங்கள்ளாம் வரும்போது மறக்காம, க்ஷேத்திர திருப்பணிக்கு அவாளவாள் கையிலே கிடைச்சதை காணிக்கையா கொண்டுவந்து ஸ்வாமி ஜீபீடம் சேத்துடுங்கோ......... இனி நீங்கள்ளாம் என்னப்பனின் அருளுக்கு பாத்திரமாவேள்!

1வதுபெண்: அப்படியே மறவாம செய்யுறோம் சாமி (வணங்குதல்)

பிராம: மங்களானி பவந்து! அப்போநான் வரட்டுமா?

1வது பெண்: சரிங்க சாமி!

திரைவிழுதல்.

அங்கம் 4.

இடம்: வீதி. [கிராம அதிகாரி ராம்லால் போய்க்கொண்டிருக்கின்றான்........தாகர் தம்பு சாமி ஐயர் சந்தித்தல்]

ராம்: ஸ்வாமி.......,...வாணும், வாணும்! ஏது இப்படி.... (ஐயர் இடது கையால் ஆசீர்வதித்தல்)

தம்பு: நம்ம ஊருக்கு எழுந்தருளியிருக்காரன்னோ! ஒர் பெரிய மஹான்! அவரை தெரிசனம் சேஞ்சுட்டு நேரே உங்களை பாத்துட்டு போவோமின்னுதான் வந்திண்டிருக்கேன்........தெய்வ சங்கல்பம், நாம் இங்கேயே சந்திச்சுடணும்னு ஆயிடுத்து...ஒரு காரியம் ஒன்னாலே ஆகணும்!

ராம்: ஸ்வாமி, நான் ஒங்க அடிமை மாதிரி, சும்மா சொல்லுங்கோ......உடனே செய்து முடிக்கிறேன்.

தம்: ஹி, ஹி, ஹி, ஒண்ணுமில்லே......எல்லாம் சுபசேதிதான். ராத்திரி எங்கனவிலே ஸ்ரீகணேச பெருமான் தோன்றி, நாம் நமது அவதாரமான சங்கராச்சாரியார் இருக்கும் ஆசிரமத்திற்கு சிறிது தூரத்தில் விக்கிரகமாய் ஜெனித்துள்ளோம். அந்த நமக்கொரு ஆலயம் பணிக்க ஏற்பாடு செய்யும். இதற்கு கர்த்தாவாக சங்கரனை இங்கு அனுப்பியுள்ளோம். எமக்கு ஆலயம் கட்டி முடிந்ததும் நாடு சொல்லொணா சுபீட்சமாய் இருக்கும். இதை அரசர் முதல் ஆண்டி வரையில் தெரிவிக்கவும் என்றார், ஆகவே உம் கையில் கிடைச்சதை ஆண்டவன் ஆலயத் திருப்பணிக்கு காணிக்கையாய் தாரும்! பகவான் உங்களை எப்போதும் காப்பாத்துவான்.

ராம்: சாமி, என் மகள் கலியாணத்துக்காக ஒரு பை பொன் சேர்த்து வச்சிருக்கேன்.

அதை ஆண்டவனுக்காக சேர்த்துவிடும். நான் தன்யனானேன். மகளின் கலியாணத்திற்கு இப்போ அவசரமென்னங்கோ? ஆண்டவனின் ஆலயத் திருப்பணியன்றோ முக்கியம். நான் பணத்தை இன்று மாலையே செலுத்திவிடுகின்றேன்.

தம்பு: சந்தோஷம்! சந்தோஷம்!! தீர்க்கமாய்ஸ்ஸா!!!

(பிராமணர் பூணூலை உருவிவிட்டுக் கொண்டு சந்தோஷமாய் போகிறார்)

திரை விழுதல்.

இடம்: வீதியின் மற்றோர் புறம்.

[பீம்ஸிங் கீழ்வரும் பாடலை பாடிக்கொண்டுபோய் தாகர் தம்புசாமி ஐயரின் மேல் மோதிக்கொள்ளுகிறான்]

பீம்:

"பறையனை பறையர் என்று
பறைந்திடு மனத்தோர் கேளீர்!
பறையர்தம் மலத்தைத் தின்னும்
பன்றியைப் பூசிப்ப தேனோ
கறையதே யாகுமந்த கறியினை
கலத்திலிட்டு,
மறைபவே வைத்துத் தின்னும்
மனிதரே பறையர் கண்டீர்!......

தம்பு: ஏலே, சூத்திரப் பயலே, என்னடா இது? மாடு மாதிரி வந்து விழறே....நோக்கு கண்ணவிஞ்சா போச்சு? கர்மம். கர்மம்.......... (தலையிலடித்துக் கொள்ளுகிறான்)

பீம்: அட......டே, நம்ம தாகர் சாமியார்! ஐயரே எனக்கு ஒண்ணும் கண்ணவிஞ்சி போயிடலே...... கண்ணவியறத்துக்கு இன்னும் ரொம்ப நாளில்லே!... இந்த ராஜபம் இப்படியே தொடர்ந்து நடந்தா...போதும் அடுத்த ஆண்டிலேயே ஏன், இன்னும் அதுக்குள்ளவே கண்ணவிஞ்சிடும், உங்களை நம்புகிறவனுக்கு!

தம்பு: ஏன்டா அப்படி சொல்றே?

பீம்: ஏனா? எங்களைப் போலொத்த, ஆளுங்க இருக்கிறதாலே தான்!

தம்பு: எண்டா சூத்திரப் பயலே, ஏது, வர வர, வாய்மிஞ்சிருப் போலிருக்கு.... நாக்கை ஒட்ட வச்சி அறுத்துடுவேன்— பத்ரம்...ஓஹோ!....

பீம்: ஐயோ என் சூரப்புலியே.........அறுத்துடுவாராமில்லே இவரு! குருக்களே அறுக்கிறதுக்கு கத்தி எடுத்தாங்களா? ஸ்வாமிகளே! தர்பையை புடிக்கிற கை......கத்தியை புடிக்கிற அளவுக்கு வந்திட்டா கத்தியையே எங்க வெளையாட்டு சாமானா வச்சி வெளையாடற எங்களுக்கு எவ்வளவு தைரியம் வரணும்? ஏம்பா, புலிக்குட்டி! வீட்டிலே பயணம் சொல்லிட்டு வந்திட்டிங்களா......கத்தியை புடிக்கிற கையை பாரு.....

(நெருங்குதல்)

தம்பு: (ஐயர் பயந்து கொண்டே) ஏண்டா... பீம்ஸிங், இப்படி கோபிக்கிறே......

பீம்: ஓப், சாக்ரதையா பேசு...நாக்கை ஒட்ட அறுத்துடுவேன்னு நீ வாயாலே சொன்னே, அதை நான் இப்போ செஞ்சே காட்டிடுவேன்.... தெரியுமா? பெரிய குலம் பெரிய குலமின்னு பெருமை அடிச்சிக்கிறீங்களே தவிர பேச்சிலும், நடத்தையிலும் பெருந்தன்மையே இல்லையே? இந்த மாதிரி அகம்பாவமா பேசினா உருபடியா ஊடு போயி சேரமாட்டே....ஆமாம்!

தம்பு: (நடுங்கிக் கொண்டே) பீம்ஸிங்! பீம்ஸிங்! நீர ரொம்ப நல்லவரோல்லியோ... என்னத்துக்கு இப்படி கோவிச்சிக்கிறேள்! நான் பரிகாசத்துக்கு விளையாடினா இப்படியா கோவப்பட்றது? உம்மை ஆண்டவன் காப்பாத்துவான்.

பீம்: ஆமாப், நீ என் மச்சான்...அதுக்காக உன்னை பரியாசம் பண்ணி வெளயாடறேன்...அதில்லாம நீ ஆசீர்வாதம் வேறு பண்ணிட்டே, இனிமே எனக்கு ஒண்ணும் குறைவில்லை...ஏன், அப்படித்தானே. இதோ பாரு...ஐயரே உம் ஆசீர் வாதமும் வேண்டாம் கிசீர் வாதமும் வேண்டாம்...... அதையெல்லாம் கோயில் தாசி கோமளம் இருக்காளே...அவண்டே வச்சிக்கிங்கோ...தெரியுமா? வேஷத்தை பாரு வேஷத்தை!

தம்: பீம்சிங், பீம்ஸிங்.... தயவு செஞ்சி இதை யாரண்டையும் சொல்லிவிடாது என்னைகாப்பாத்து. உனக்கு கோடி புண்ணியமுண்டு. உனக்கு ஒரு குறையும் வாராது....

பீம்: அடசே! உன்னைபத்தி ஊராருக்கு சொல்றது தானா எனக்கு வேலை? நான் சொல்லாமலேயே ஊரு இன்னம் கொஞ்ச நாளிலே தெரிஞ்சிக்கும், அப்போ, உங்களை அந்த சாமியாலே கூட காப்பாத்த முடியாது..... வேணுமின்னா பாரேன்........

(பீம்ஸிங் போகிறான்)

தம்பு: இந்த பயலுக்கு நம்ம வண்டவாளம் எல்லாம் எப்படி தெரிஞ்சிது? இனிமே நாம் சர்வ ஜாக்ரதையாதான் நடந்துக்கணும்...சமயம் வந்தா இந்த பயலை ஒழித்து கட்டிடணும். அட ஈஸ்வரா! இந்த சூத்திர நாய்கள் எங்களை இப்படி நேருக்குநேர் அவமானமா பேசறது நோக்கே நன்னா இருக்கா? சாம்பசிவம்!......சாம்பசிவம்!!!

திரை விழ்தல்.

அங்கம்: 5.

இடம்: பீம்ஸிங் வீடு.

[பீம்ஸிங்வீட்டுக்குப் போகிறான். வீடு பூட்டியிருப்பதால் திண்ணையில் அமருகிறான்]

பீம்: ஏண்டி இவ்வளவு நேரம்?

தங்: ஆத்தங்கரை நம்ப வீட்டு பக்கத்திலேதானே இருக்கு...நாயாட்டம் ஒரு கல் தூரத்துக்கு ஓடிப்போயி தண்ணி கொண்டு வந்தா தெரியும்?

பீம்: உன்னே யாருடி நாயின்னு சொன்னது?......

தங்: சொல்லி வேறே தெரியணுமாக்கும்! ...

பீம்: அப்போ நீ என்னா... நிசமாலே நாய்தானா?......

தங்: இதோ பாரு இந்த பரியாச மெல்லாம் எங்கிட்டே வச்சிக்காதே, தெரியுமா? அதுக்கு வேறே ஆளைப்பாரு..........

பீம்: அடே! இவகிட்டே வச்சிக்காம பின்னே யாருகிட்ட தான் வச்சிக்கிறதாம்? ஏண்டி இவ்வளவு நாழியின்னா இப்படி பிடாரிமாதிரி விழுறுளே!! அட கட்டையிலே போற கடவுளே!....

தங்: என்னாது பிடாரியா? நீ பிடாரி, உங்கப்பன் பிடாரி, உங்கம்மா பிடாரி....உங்கபாட்டி பிடாரி...உங்க வம்சமே பிடாரி ......பிடாரியாம், பிடாரி!

பீம்: அம்மா தாயே! அடக்கு அதுவரைக்கும், நீ பிடாரி இல்லே............பிடாரி இல்லே......பிடாரி இல்லே !... உம்....உன்னே சொல்லி குத்தமில்லே!......கொட்டைமாலையா போட்டுகிணு கையிலே மண்டை ஓட்டே வச்சிக்கிணு நிக்குதே கோயில்லே...... ஒரு அகோர சொரூபம்.........அதைத்தான் சொல்லணும்!

தங்: அடசே, நீயும் ஒரு மனுசந்தானா? கடவுளை கண்டபடி திட்டுகிறியே....உன் கண்ணு அவிஞ்சி போயிடும் தெரியுமா?

பீம்: ரொம்ப நிம்மதி!

தங்: ஏனாம்?

பீம்: எங்கண்ணு அவஞ்சி, குருடனாயிட்டா அப்புறம் இவருதான் ராஜா......எவரு... இவரு!...

தங்: எப்படி?

பீம்: ஓயாம, ஒடியாம, ஆடாம, அசையாம, அரசமரத்தடியாண்டே குண்டு கல்லு மாதிரி ஒக்காந்துகிட்டு ஊரை ஏமாத்துறானே சாமி............ சாமின்னு.......... அவனைப்போல நானும் நிம்மதியா நீ போடுகிறதை சாப்பிட்டுகிணு இருப்பேன்!

தங்: பெரியவங்களை இப்படியெல்லாம் பழிச்சி பாவத்தை தேடிக்காதே! அந்த சாமி யாரு மொகத்திலே, விசறகளையை பாத்துகிணு இருந்தாலே போதுமே...நம்ம பிடிச்ச பீடையெல்லாம் காத்தா பறந்திடும் தெரியுமா?.......

பீம்: என் விசாதுகளை?... ஊராரு சொத்தை என்னதில் வேனு முழுங்குறானே......களை வீசுதாம், களை.......!

தங்: அவரு சக்தி இன்னென்று சொல்றேன் கேளு! அவரு இருக்காரு பாரு.........

பீம்: இல்லாம, செத்தா போயிட்டாரு.........

தங்: அட நீ ஒரு எழவு... சொல்றதுக்குள்ளே இப்படி அவசர குடுக்கையா இருக்கியே ....அவரு ஆசிரமத்துக்கு கொஞ்ச தூரத்திலே பரமசிவன் விக்ரகாமி அதாவது லிங்கமா பொறந்திட்டாரு பூமிக்குள்ளே!!! அதை எடுத்து அங்கே ஒரு கோவில் கூட கட்டப்போறாங்கோ.......!!

பீம்: இத்தை எவன் புளுகிட்டான்?

தங்: யாரும் புளுகல்லே... இந்த மாதிரி இருக்குதின்னு மஹா விஷ்ணுவே, நம்ம கோயில் குருக்கள் குப்பா சாஸ்திரியார் கனவிலே வந்து சொன்னாராம்!!

பீம்: சொல்லுவாரடி...... சொல்வாரு ஏன் சொல்மாட்டாருன்னே.........அவருடைய அவதாரந்தானே இவரும்...... எனக்கென்னவோ, அடிக்கடி ஒண்ணு தோணுது......

தங்: என்னது?

பீம்: இந்த சோத்து தருத்திங்களாலே நம்ப நாட்டுக்கு இன்னிக்கி இல்லாவிட்டாலும், கொஞ்ச நாளைக்கு அப்புறமாவது பெரிய ஆபத்து வருமின்னு......

தங: ஒண்ணும் ஆபத்து வந்திடாது...பரமசிவனே நம்ப நாட்டிலே லிங்கமா பொறந்திட்டாராம்! இனிமே நமக்கு என்ன குறைச்சல....நாம்ப இந்த நாட்டிலே பொறந்து இதையெல்லாம் பார்க்க கொடுத்து வைச்சவங்க தெரியுமா?

பீம்: அடியே அவன் சொன்னான்னு கேட்டுவிட்டு வந்து சொல்றியே, உனக்கு வெக்கமா இல்லே?......

தங்: ஏன் எதுக்காக?

பீம்: எதுக்காகவா? அடியே, சிவலிங்கம், சிவலிங்கமின்னு சொல்றுனுங்களே அதனுடைய வெவரம் தெரியுமா? தெரிஞ்சா நீ அதைபத்தி கனவிலே கூட நினைக்கமாட்டே!

தங்: அது என்னாது?

பீம்: அதுவா ...... சொல்றேன் கேளு......உங்க கடவுளுண்ணு சொல்ற ஈஸ்வரன் ஒரு சமயம், தாருகா வனத்தில் உள்ள ஒரு ரிஷி பத்தினியைக் கண்டு மோகித்து நாலாவிதத்தில் அவளை மயக்கி, கூடி சுகம் அநுபவித்து வந்தாரு. இதனாலே, அந்த ரிஷி பத்தினி தன் கணவன் மேல் முன்னிருந்த பாசத்தோடு இல்லாம, வெறுப்பா நடந்துகிணு வந்தா. இதைக்கண்டு சந்தேகப்பட்ட அந்த ரிஷி ஒருநாள் தான் வெளியே போய் சாயங்காலமா வருவதாய் சொல்லி போயிட்

டான். அவன் வெளியே போனதும் ஈஸ்வரன் அங்கு வந்து அந்த ரிஷி பொஞ்சாதியோட, சல்லாபமா இருந்தாரு. அப்போ, வெளியே போயிருந்த ரிஷி திடீரென்று அங்கு வந்தான் அந்த அலங் கோலத்தை கண்டான். உடனே, "தன் மனைவியை அயோக்கியதனமாய்க்கூடி இருந்தவன் ஆண்குறி அறுந்து விழக் கடவது" என் சாபமிட்டான். அதுக்கு பதிலாக, ஈஸ்வரன் "அறுந்த என் ஆண்குறி உனது நெற்றியில் ஒட்டிக் கொள்ளக் கடவது" என எதிர் சாபமிட்டான். அப்போதுதான் அந்த ரிஷிக்கு தன் மனைவியைக் கள்ளத்தனமாய்க் கூடி இருந்தது ஈஸ்வரனெனத் தெரிஞ்சுது. உடனே அவரு காலிலே விழுந்து தன் நெற்றியிலே ஒட்டிக்கிடந்த சிவனது லிங்கத்தை (ஆண்குறியை) அகற்றும்படி வேண்டிகிட்டான். அதற்கு அந்த சிவன் சிரிச்சிட்டு அந்த கோலத்தோட கைலாயம் வந்து சேர் என சொல்லிட்டு மறைஞ்சிட்டான். ரிஷியும் அசையாது தன் நெற்றியில் ஒட்டிக் கொண்ட லிங்கத்தைத் தூக்கி பிடிக்க அது கொஞ்சம் வளர்ந்து தொங்கிற்று.

(தங்கம் சிரிக்கிறாள்)

இன்னும் குறையும் கேளு... அத்தை பார்த்த ஒரு ரிஷி அதை தாங்கி பிடிச்சாரு. அது மேலும் மேலும் வளரத்தொடங்கவே, அந்த தாருகாவனத்திலிருந்த ரிஷிங்கெல்லாம் அதை தூக்கி பிடிச்சுகிட்டு ஒரு தினுசா கைலாயம் வந்து சேர்ந்தாங்க. அதைபார்த்ததும் பார்வதி உழுந்து உழுந்து சிரிச்சா...ஈஸ்வரனும் அதை கீழே விடும்படி கட்டளையிட்டு பின்பு அதை பார்வதியின் யோனியிலே (பெண் குறியிலே) வைச்சு கட்டினாரு. பின்பு, இந்த அடையாளத்தை பூசைக்கு யோக்கியமாக்கி பூலோகத்தில் வைத்து கும்பிடுவார்களானால் உங்களுக்கு சகல பாக்கியங்களும் சித்திக்கும் என்று வரம் தந்தார் அதிலே இருந்து ரிஷிகளும், மற்றயாவரும் பரம்பரை பரம்பரையாய் அந்த அடையாளத்துக்கு "லிங்க பூசை" இன்னு பேர் கொடுத்து, வழி பட்டு வர ஆரம்பிச்சாங்க....... இது தான் அதன் வெவரம். இப்போ நீயே சொல்லு இத்தை அறிவுள்ள யாராவது கும்பிடுவாங்களா?.........

தங்: அப்படி ஒண்ணும் இருக்காதுங்க........

பீம்: இருக்காதா, அந்த சிவலிங்கத்துக்கு வரலாறு இப்படி தாண்டி அந்த புராணத்திலே எழுதி வச்சிருக்கு!...... உம், உன்னை சொல்லி குத்தமில்லே நீ படிச்சிருக்கிறது கட்டை செவரும், குட்டிச்செவருந்தானே..... நான் இன்னிக்கெல்லாம் படிச்சி படிச்சி சொன்னாலும் உம் மர மண்டையிலே என்னமோ, ஏறப்போகிறதே இல்லை. அது எப்படியாவது தொலைபட்டும்....நான் கொஞ்ச நாளைக்கு முன்னே கொடுத்து வைச்சேனே, அந்த அறுவடை பணத்தை கொண்டா, வீட்டை கொஞ்சம் பழுது பாத்துகிட்டு துணிமணிகளை கொஞ்சம் வாங்கிக்குவோம்....... வருகிற காலம் மழைகாலம் பாரு......

தங்: வூட்டுக்கு இப்போ ஒண்ணும் அவசரமில்லே, இந்த அறுவடையிலே வர பணத்திலே பாத்துக்கலாம். நீங்க கொடுத்த பணத்தை கோயில் கட்டறதுக்கு கொடுத்துட்டேன்

பீம்: என்ன?.......கோயில் கட்ட....ஏய்.. இப்படி என்னை பாத்து பேசு...........ஏண்டி உனக்கு பயித்தியம், கியித்தியம் புடிச்சிடுதா என்ன? ஏண்டி இப்படி பித்துபுடிச்சவ மாதிரி, சாமி...சாமீன்னு சாகறே...... போயும் போயும் எனக்குன்னு வந்து வாய்ச்சியடி தாயே... ஐயோ!.....ஐயோ!....ஐயோ!.... (தலையில் அடித்துக்கொள்ளுகிறான்) ஏண்டி இருக்கிற கோயிலுங்களிலே வௌவாலும், திரிஞ்சலும் பறக்கிறது பத்தலேன்னு புதுசா ஒரு கோயில் கட்டப் போறாங்கோ!!

தங்: ஏன், இப்படி குடி முழுகிட்டாபோல தலையிலே அடிச்சிக்கிறே.......... சாமிக்கு கொடுக்கிறதாலே நாம்ப ஒண்ணும் கொறைஞ்சிட மாட்டோம்...பின்னாலே இதுபோல பத்து மடங்கா சாமி கொடுப்பாரு. ஒண்ணுக்கும் கவலைப் படாதிங்க....

பீம்: கொடுப்பாருடி......... கொடுப்பாரு...இந்த மாதிரியே நீ நடந்திகிட்டுவந்தா.......கடைசியிலே, கையிலே, ஆளுக்கொரு துந்தனாவும், கலயமும் கச்சிதமா கொடுப்பாரு........

தங்: ஏன் இப்படி, ஒரே நாஸ்திகம் பேசறே....கடவுளை பத்தியும், சாமியார்களை பத்தியும், ஐயமார்களைபத்தியும் ஏசறதாலே நமக்கு என்ன வந்திடப் போவுது.......இதனாலே பாவம் சேர்றதுதான் மிச்சம்......!

பீம்: ஆமாம்....நான் நாஸ்திகம் பேசி நரகத்துக்கு போயிடுவேன்னுதான் நீ ஆஸ்திகம் பேசி என்னை உசிரோட, மோட்ச லோகத்துக்கு அனுப்ப பாக்கிறே...ஏன், அப்படித்தானே? உன்னை மாதிரி காலி மண்டைகளாலேதானடி அவனுங்க பொழைக்கிறது...நீங்க இல்லாவிட்டா அவனுங்க தகிங்கணதோம் போடவேணுமா?... மூஞ்சியும் மொசரக்கட்டையும் பாரு...நல்லா, நாய்மூஞ்சி மாதிரி!......

(10-ம் பக்கம் பார்க்க)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

வேளையாக நான் பதினைந்தாவது வயதிலேயே என் படிப்பை முடித்திருந்தேன். அது அன்று எனக்குத் துணை புரிந்தது. என்னோடு படித்த தோழர் ஒருவர் ஆதரவால் நான் வேலையிலமர்ந்தேன். என் தாய் கவலையற்று சந்தோஷமாக இருக்க எல்லா வசதிகளையும் செய்தேன். என் அருமைத் தங்கை உமாவை அவள் பெற்று எடுத்து, ஒருவருஷத்திற்குள் எனக்குமணம் செய்வித்தாள். என்னைத் தவிக்க விட்டு என் அன்னை இறந்தாள். கவலையால் கலங்கிய எனக்கு, தன் தந்தைத் தாயோடு வாழ்ந்து வந்த பாலா, ஆறுதல் தரும் அணங்கானாள். பாலா இன்று என் மனைவி. பாலாவின் உள்ளன்பாலும், என் தங்கையின் உயிர் நேயத்தாலும் நான் என் கவலையை ஒருவாறு மறந்து காலங்கடத்தினேன். எனக்கு மூன்று வயதுக் குழந்தையொன்றும் இருக்கிறது, இரண்டு வாரங்களுக்கு முன்புதான் மாம்பலத்தில் நாங்கள் இருந்த வீடு வசதிக் குறைவாய் இருந்ததால் இங்கு குடி வந்தோம்'' என்று கூறிப் பெருமூச்செறிந்தார்.

''நண்பரே! இனி உங்களுக்கு கவலை வேண்டாம். நான் உங்கள் உற்ற நண்பன்'' என்று கூறி, ''போய் வருகிறேன். இன்று பகல் உங்கள் தந்தையை அழைத்து வருகிறேன்'' என்றேன்.

அவர் ''பாலா, இங்கே வா'' என்று தன் மனைவியை அழைத்தார்...சிரித்துக் கொண்டே நாங்கள் உட்கார்ந்திருந்த அறைக்குள் நுழைந்தாள் பாலா.

''பாலா, இவர் யார் தெரியுமா?'' என்றார்.

பாலா, ''தெரியும். நீங்கள் பேசியதையெல்லாம் அறைக்கு வெளியிலிருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்'' என்று கூறி என்னை வணங்கினாள்.

எல்லையற்ற மகிழ்ச்சி, எனக்கும் அவர்களுக்கும்.

நான் ''நண்பரே! அம்மா! உமா! போய்வருகிறேன்'' என்றேன்.

''போய்வாருங்கள், அண்ணா'' என்றாள் பாலா.

அன்று பகல் நானும் அந்த நொண்டிக்கிழவரும், என் நண்பர் மணியத்தின் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தோம். அப்போது பிச்சைக்காராயிருந்த கிழவருக்கு நல்ல உடை அணிவித்திருந்தேன்.

வீட்டிற்குள் நுழைந்ததும், ''அப்பா'' என்று அலறி அணைத்தார் அவர் மகன் மணியம். முறுவல் செய்தாள் பாலா. திகைத்து நின்றாள் உமா. திணறிப்போனேன் நான்.

அன்றுமுதல் பாலா என் உடன் பிறக்காத உயிர்த்தங்கையானாள். பாலாவின் மூன்று வயதுக் குழந்தை என்னை ''மாமா'' என்று அன்புடன் அழைக்கும். நான் என் ஓய்வு நேரத்தையெல்லாம் மணியத்தின் வீட்டிலேயே கழித்தேன். அவர்கள் அன்பு என்னை அவர்களோடு இறுகப் பிணைத்தது.

நாட்கள் மாதங்களாகி உருண்டோடி மறைந்தன. ஒருநாள் கிழவர் மாடிப்படி ஏறிக்கொண்டிருந்தவர் தவறிக் கீழே விழுந்தார். ஒடிந்த அவருடைய கால் மீண்டும் ஒடிந்தது. அவருக்குக் கடுமையான சுரம் கண்டது. பத்து நாட்கள் படுக்கையில் கிடந்து துன்புற்றார்.

கிழவரின் இறுதி நாளில் நானும், மணியமும், பாலாவும் அவர் பக்கலிலேயே இருந்தோம். சாகுமுன் அவர் அன்பாக என் கைகளைப் பிடித்து ஏதோ கூற முயன்றார். கிழவரின் கடைசிமூச்சு ''பாலா—மணி'' என்ற இரண்டு வார்த்தைகளை வெளித்தள்ளி நின்றது.

சாவின் அழைப்பை ஏற்ற கிழவரின் சவம், கட்டிலிலே யிருந்து கட்டாந்தரைக்கு மாற்றப்பட்டது. நாங்கள் கிழவரின் படுக்கையை அப்புறப்படுத்தினோம். படுக்கையிலிருந்து மடித்த ஒரு கடிதம் கீழே விழுந்தது. நான் கடிதத்தை எடுத்தேன். அதன் மடிப்பின் மீது ''மரணசாசனம்'' என்று எழுதப்பட்டிருந்தது. நான் பாலாவையும், அருமை மணியத்தையும் அழைத்துக் கடிதத்தைப் படித்தேன்.

என் அருமை மகனே! அன்புள்ள பாலா! என் உயிர் நண்பரே!

காலத்தின் அழைப்பு என் காதுகளிலே தெளிவாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. என் முடிவு நெருங்கிவிட்டது. நான் உங்களிடம் விடைபெறும் முன்பு, எழுதப்படும் இந்தக் கடிதம் என் அன்பின் பரிசு: மரணசாசனம்.

குழந்தைகளே! அன்று நான் பணக்காரன். இன்று பிச்சைக்காரன். அன்று நான் உத்தமன். இன்று உலுத்தன். அன்று நான் வாழ்வின் உச்சி. இன்று நான் தாழ்வின் ஆழம். அன்று என் வாழ்வு பெருமிதத்திற் கெடுத்துக் காட்டு—அடக்கத்தின் அடையாளம். இன்று துரோகத்தின் நிழல்.

வாழ்வில் நான் என் அன்புடையாளுக்கு—என் மகனின் அன்னைக்கு—செய்த துரோகத்தின் எதிரொலிதான் என் வனப்புடலில் ஊனம்—நான் நொண்டி. இந்த வாழ்விலே நான் செய்த குற்றத்திற்கு தண்டனை இந்த வாழ்விலேயே அனுபவித்தேன்! நரகத்தில் அல்ல. நரகத்தை நம்பாதீர்கள். அது உண்மை நாடாது. அது பெரும் பித்தலாட்டம்.

என் வாழ்வின் படிப்பினைகள் தான நான் உங்களுக்கு வைத்துப் போகும் சொத்து. அன்போடு என் பரிசினை ஏற்றுக்கொள்ளுவீர்களா?

''பெண்களுக்கு மாத்திரம் கற்பு நிர்ப்பந்தமாய் வைத்ததாலேயே ஆண்கள் விபசாரர்களாக வேண்டியதாய் விட்டது'' என்பதற்குப் பலியான ஆணவ ஆண் கூட்டத்தில நானும் ஒருவன். இந்த ஒரே கருத்துத்தான் நான் உங்களுக்கு வைத்துப் போகும் வெகுமதி.

எனவே உங்கள் வாழ்விலாவது சுதந்திரமான காதலுக்கு இடம் காணுங்கள். மிருகத் தன்மையுண்டாக்கும் நிர்ப்பந்தக் காதல் அடியோடு ஒழியட்டும்!

உங்களை விட்டு மனமுடைந்து மறையும் என் இறுதிப் பரிசு—இதோ என் கண்களிலே புரண்டோடும் கண்ணீர்தான்.

—

இந்திய அரசியல் திட்டம்

நம் 'போர்வாள்' ஆசிரியர் மா. இளஞ்செழியன் உடல் நலக் குறைவால் சென்னை ஸ்டான்லி மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த காரணத்தால், இடையில் ஒரு வாரம் 'போர்வாள்' நிறுத்தப்பட்டதோடு சென்ற இரு கிழமைகளாக, 'இந்திய அரசியல் திட்டம்' தொடர்ச்சியையும் வெளியிட இயலவில்லை, வாசகர்கள் மன்னிக்க வேண்டுகிறோம், அடுத்த வாரம் முதல், கட்டுரை, தொடர்ந்து வெளிவரும்.

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1981 ஆனி 10
24—6—50 சனிக்கிழமை

எட்டு ஏழு ஆகிறது!

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கண்மூடித்தனமான ஆட்சியால் மக்கள் படும் வேதனைகளுக்குள்ளே தலைசிறந்த வேதனை உணவுப்பற்றாக்குறை என்ற கொடிய பிரச்சினையே ஆகும். இந்தப் பாரதபுத்திரர்கள் ஆட்சிபீடம் ஏறியபோது, மக்களுக்குக் கிடைத்துவந்த அரிசிப் பங்கீட்டு அளவு, 12 அவுன்ஸ். ஆந்திரகேசரி என்று ஆனந்தத்துடன் அழைக்கப்படும் அருமைக் காங்கிரஸ் அன்பர் பிரகாசம் முதலமைச்சரானார்-12 அவுன்ஸ், 10 அவுன்ஸாயிற்று. அவருக்குப் பின் ஓமந்தூரார் ஓடோடி வந்தார் முதல்மந்திரியாகி மக்களுக்கு முழுநன்மை செய்திட! ஆனால் முடிவில் அவர் செய்து முடித்ததோ 10 அவுன்ஸாக இருந்த பங்கீட்டு அளவை 8 அவுன்சாகக் குறைத்ததுதான்! ஓமந்தூரார் காலம் முடிந்து ராஜபாளையத்தார் சகாப்தம் பிறந்தது! அரிசியின் அளவு மேலும் குறைந்தது! எட்டு, ஏழு ஆகிவிட்டது. ஜூலை 1-ம் தேதி முதல், சென்னை மாகாணத்து மக்கள் உண்ணும் அரிசியின் அளவு ஏழு அவுன்ஸ்தான் இருக்க வேண்டும் என்று ஆளவந்தார்கள் ஆனந்தகீதம் பாடி முடித்துவிட்டார்கள்!

ஏன் இந்த ஆட்சியாளர்கள் இப்படி வாட்டி வதைக்கிறார்கள் மக்களை? உணவு உற்பத்தி குறைவாக இருக்கிறதா? அப்படியானால், உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்கள் தீட்டுவதற்கென்ன? திட்டங்கள் பல தீட்டினோம்-பணம்தான் செலவாயிற்று—பயனேதும் விளைந்திலது என்கிறார்களா? அப்படியானால் தங்கள் திறமையின்மையை ஒப்புக்கொண்டு, தங்கள் திறமையின்மை காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட எண்ணற்ற தொல்லைகளுக்கு மன்னிப்பும் கேட்டுக்கொண்டு, ஆட்சிப் பீடத்தைவிட்டுக் கண்ணியமாக வெளியேறுவதுதானே? பதவியாசை, வெளியேறவிடவில்லையா? அங்ஙனமாயின், வெளிநாடுகளிலிருந்தாவது அரிசியை விலைக்கு வாங்கிப் பங்கிட்டுத் தருவதற்கென்ன? அதுகூடவா செய்யக்கூடாது மக்கள் நலனை முன்னிட்டு? அதைச் செய்வதற்குக்கூடவா சோம்பல்?

அரிசி வெளிநாடுகளில் கிடைக்கவில்லை என்று கூறமுடியாதே! இப்போதுகூட அண்டை நாட்டுப் பர்மாவில் 15 லட்சம் டன் அரிசி வெளிநாட்டு ஏற்றுமதிக்குத் தயாராகக் காத்துக்கிடக்கிறது என்று பத்திரிகைகள் தெளிவாகக் கூறுகின்றனவே!

இந்த உண்மையை ஆட்சியாளர்கள் அறிந்திலர் என்றும் இயம்ப முடியாதே! நம் நிதி அமைச்சர் கனம் கோபாலர் இந்த மாதத்தில் பல நாட்களை பர்மாவில்தானே செலவிட்டிருக்கிறார்! இப்போது கூட இந்தியப் பிரதமர் பண்டித நேரு பர்மாவில்தானே பவனி வந்துகொண்டிருக்கிறார்!

வெளிநாட்டு அரிசியை வாங்கப் பணமில்லை என்றும் கூறமுடியாதே! இங்கிலாந்து நமக்குத் தர வேண்டிய பல கோடி ரூபாய் கடன்தொகையை இந்தச் சிறந்த காரியத்திற்குத் தாராளமாகப் பயன்படுத்தலாமே! ஊர் மக்களுக்கு உணவளிக்கும் இந்த உத்தமமான செயலுக்குச் செலவாவதைவிட வேறு எந்தச் செலவுக்காக அந்தப் பணம் பயன்பட இருக்கிறது?

"வெளிநாடுகளில் அரிசி கிடைக்கிறது—அது எங்கட்குத் தெரிந்தும் இருக்கிறது—அந்த அரிசி வாங்கப் பணமும் இருக்கிறது — அந்தப் பணத்தைத் தர இங்கிலாந்தும் தயாராகத்தான் இருக்கிறது — ஆனால் நெல் விளையும் பூமி என்று புகழ்பெற்ற இந்தியா பிற நாடுகளிலிருந்து அரிசி வாங்குகிறது என்ற நிலை இருப்பது கௌரவக் குறைவல்லவா—எனவேதான் பிற நாடுகளிலிருந்து அரிசி வாங்கவில்லை" என்று ஒருவேளை ஊராளும் உத்தமர்கள் விசித்திர வாதம் புரியக்கூடும். ஆனால் இந்த வாதம், வாதமன்று; பிடிவாதமே ஆகும்! வெளிநாடுகளிலிருந்து அரிசியை விலைக்கு வாங்குவது கௌரவக் குறைவு என்றால், உள்நாட்டில், மக்கள், உணவில்லாக் காரணத்தால் அரைப்பட்டினியும் முக்கால் பட்டினியும் இருந்து, சிறுகச் சிறுகச் செத்துக்கொண்டிருப்பது மட்டும் கௌரவக் குறைவல்லவா?

"அரிசியை விலைக்கு வாங்கும் அதிகாரம் எங்களிடம் இல்லை. அது டில்லி ஆட்சியாளரிடம்தான் இருக்கிறது. அவர்கள் வாங்கிக் கொடுக்கும் அரிசியை மக்களுக்குப் பங்கிட்டுத் தரும் அதிகாரம் மட்டும்தான் எங்களுக்கு இருக்கிறது. டில்லி, பிற நாட்டு அரிசியைவாங்க மறுப்பதால்தான், சென்னை மாகாணத்தவர் உணவின்றித் தவிக்க நேர்கிறது. உண்மை! ஆனால் அதற்கு நாங்களென்ன செய்யமுடியும்! டில்லி தேவதைகளின் கண்களல்லவா திறக்கப்படவேண்டும்?" என்று சென்னை ஆட்சியாளர்கள் ஒருவேளை சொல்லக்கூடும். வெளிப்படையாகச் சொல்ல மாட்டார்கள்! சொன்னால், டில்லி அவர்கள் தலையிலே குட்டக்கூடும்! எனவே சொல்வதாயிருந்தால் இரகசியமான முறையிலேதான் சொல்லக்கூடும்.

ஒப்புக்கொள்கிறோம் — அது உண்மை! டில்லி தேவதைகளின் கைகளிலேதான் அந்த அதிகாரம் மண்டிக் கிடக்கிறது! அப்படிக் கிடப்பதால்தான், நம் அரிசிப் பங்கீடு 12 லிருந்து 10 ஆகி, 10 லிருந்து 8 ஆகி, 8 லிருந்து 7 ஆகி; இன்னும் இரண்டொரு மாதங்களுக்குள் 7 லிருந்து 6 ஆகவோ 5 ஆகவோ ஆக வழிபார்த்துக் கொண்டிருக்கிறது! மெய்தான்! டில்லிதான் காரணம் இதற்கு! தெரிகிறது நமக்கு! ஆனால்? அதற்காக! சென்னை ஆட்சியாளர்கள் பொறுப்பற்று இருப்பதா? டில்லி தேவதைகளின் இந்தக் கொடுங்கோன்மையை எதிர்த்து வீரத்

(10-ம் பக்கம் பார்க்க)

செந்தமிழர் உண்பதற்குரிய நல்ல செங்கரும்புகள்!

அறிஞர் அண்ணாதுரை இயற்றிய

	ரூ.	அ.
ரங்கோன் ராதா	2	8

சமுதாய நிலைமைகளைச் சுவைமிகு தமிழில் எடுத்து விளக்கும் எழில் மிகு சுவடி. 270 பக்கம்

செல்லப் பிள்ளை	1	0

செல்லப் பிள்ளை, சுமங்கலி பூஜை, காசூரர் கருணை, விலை ஏறிவிட்டது, வழக்கு வாபஸ், யார் கேட்க முடியும் என்னும் ஆறு அரிய நாடகங்கள்

வாழ்க்கைப் புயல்	0	10
செவ்வாழை	0	8
சாது	0	8
மாடிவீடு	0	8
ஜெபமாலை	0	8
தேவலீலைகள்	0	8

[பழமை வாதிகளின் புராணப்பித்தம் தீர அண்ணா தந்துள்ள மூன்று டோஸ் மருந்து.]

சிந்தனை விருந்து	0	6
சமுதாயப் புரட்சி	0	4
விதிக்கு அடிமைத்தனம் (வானொலிச் சொற்பொழிவு)	0	2

இராதாமணாளன் இயற்றிய

மனப்புயல்	1	8

ஓவியன் குமார், அறப்போர் வீரன் கோபால், வைத்தியர் வையாபுரி, நோயாளி சிவன், குள்ள உள்ளம் படைத்த கோடீஸ்வர அய்யர், அவர் வலையில் சிக்கிய காளிமுத்து, அழகுமங்கை குமுதம், இன் சொல் அரசி வேணி, ஆரிய அணங்கு மனோரமா ஆகிய இவ்வளவு பேரையும் நீங்கள் கண்டு பேசலாம் மனப்புயலில்! ஒரு முறை கண்டால் நீங்கள் அவர்களை எப்போதும் மறக்க மாட்டீர்கள். மனப்புயல், ஒரு சிறந்த உயிரோவியம்.

ருஷ்ய நாட்டழகி	0	8

சுவையான காதல் கதைகளின் தொகுப்பு. செந்தமிழ் துள்ளி விளையாடும் இனிய நடை. தேன் ஆறு போன்ற கதைப்போக்கு.

மா. இளஞ்செழியன் இயற்றிய

	ரூ.	அ.
தமிழன் தொடுத்த போர்	1	12

இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்மகத்தான வரலாறு. சேரன் செங்குட்டுவன் பரம்பரை கனக விசயர் பரம்பரையை வீழ்த்திய வீரகாதை! 240 பக்கங்கள். மிகக் குறைந்த விலை.

"இந்த வரலாற்றினை என் நண்பர் இளஞ்செழியன் உணர்ச்சி ஊட்டக்கூடியமுறையில், இனிமையும் பயனும் உள்ள முறையில், தீட்டியுள்ளார் இந்நூலின் மூலம், நண்பர், தமிழ்மொழிக்கும் தமிழருக்கும் நற்றொண்டு ஆற்றியுள்ளார். என் பாராட்டுதல். தமிழரின் இல்லந்தோறும் இந்நூலிருந்து, உள்ளந்தோறும் உணர்ச்சியை ஊட்டி, நாட்டின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிதற்கான அறப்போர் புரியும் ஆற்றலைத் தருமாக! தரும்—நிச்சயம்! ஆம், தமிழகம் தழைக்க இந்த ஏடு பெரிதும் பயன்படும்"

—அண்ணாதுரை.

திராவிடஸ்தான் வேண்டாமா	0	8

வேண்டாம் என்று கூறுவாரின் பொருத்தாக் கூற்றுகளைத் தகர்த்தெறியும் சம்மட்டி இச்சுவடி.

இரோட்டுப் பாதை	0	6

சுயமரியாதை இயக்கத்தின் சுவைமிக்க வரலாறு. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன.

பிற நூல்கள்

திராவிடம் என்றால் என்ன	0	6
ஆரியத்தால் விளைந்த கேடு	0	6
பெண்கள் போராட்டம்	0	6
உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு	0	8
புரோகிதர் ஆட்சி	0	8
பெண்கள் புரட்சி	0	14
திராவிட இந்தியா	1	0
இராமாயணம் நடந்த கதையா	0	3
திருக்குறள் மூலம்	0	4
ஷை 5 படிகள்	1	0

பகுத்தறிவுப் பாசறை,

பவழக்காரத் தெரு,
சென்னை 1.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியப்பனுக்குக் கேட்காதபடி கேட்டாள்.

"முறிவு ஒன்றும் இல்லே பம்மா! காயம மட்டும்தான் பட்டிருக்கிறது!" என்று அமைதியாகக் கூறினர் டாக்டர்.

மீண்டும் தேவி அவளுடைய அறைக்குத் தள்ளிச் செல்லப் பட்டாள். டாக்டரும் அவளைப் பின் தொடர்ந்தார். அவளுக்காக அவர் மிகவும் அனுதாபப்பட்டார். இரண்டுமுறை ஏற்கனவே சிறு அதிர்ச்சியால் மயக்கம் அடைந்ததையும் அவர் அறிவார். அதனல் தான் மற்றவற்றை அவளுடைய அறையில் பேசிக்கொள்ளலாம் என்று கருதி அவளே அங்கிருந்த அறைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினர்.

* * *

மறு நாள் காலே:—

மருத்துவ மனைத் தோட்டத்திலிருந்து காற்று நன்ருக வீசிக் கொண்டிருந்தது. பெருந்தேவி முன்னைவிட மிகவும் உடல் நலம் பெற்றிருந்தாள். காலையில் 'வார்டை'ப் பார்வையிட வந்த டாக்டர் பெருந்தேவியின் அருகில் வந்து அமர்ந்து பேசலானர்:

'நீங்கள் சீக்கிரம் குணமடைந்து விடுவீர்கள். அதன் பின் உங்கள் கணவரிடம் நீங்கள் போய் அவருக்கு வேண்டிய உதவி செய்யலாம். என்ன இருந்தாலும், மனைவியின் பணிவிடைக்கும், நர்சின் சிஷ்ருஷைக்கும் [illegible] வித்தியாசம் உண்டல்லவா!"

பெருந்தேவி நாணத்தால் தலை குனிந்தாள். ஆம்; அச்சமும் நாணமும் நாய்களுக்குத் தான் வேண்டும் என்று கூறும் புதுமைப் பெண் பரம்பரையைச் சேர்ந்த பெருந்தேவி தலை சாய்த்தாள்! என்னதான் இருந்தாலும் படிப்பும் நாகரிகமும் அவர்கள் உள்ளத்தைப் பாறையாக்கிவிட முடியாதே—இயற்கைக் குணமும் சிறிது இருக்கத்தானே செய்யும்!

"டாக்டர் சார்! இன்னும் எத்தனை நாட்களாகும், அவர் எழுந்து நடமாட.......? அவர் டாக்டர் பெரியப்பன் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகின்றேன்!"

"ஆம், அம்மா! அவரை எனக்கு முன்பே தெரியும். டாக்டருக்கே நோய் வருவது வேடிக்கைதான்! ஆனாலும், எதிர்பாராத நோயல்லவா இது!"

"அதிருக்கட்டும், டாக்டர்! எழுந்து நடமாட எத்தனை நாட்களாகும் என்று கேட்டேனே?"

"அவருக்கு எலும்பு முறிவு ஒன்றுமில்லை! காரிலிருந்த பெற்ரோலானது தீப்பற்றி, பெரியப்பனின் இடது காலில் தெறித்து, வெந்துபோய் இருப்பதுடன், தண்ணீர் பட்டு, பச்சைவாதமும்உண்டாகியிருக்கிறது"

"பச்சை வாதமா? பச்சை வாதமா?.......ஒரு பக்க உடல் உணர்ச்சி அற்றுப்போய் விட்டதா?...பயன்படாதா?" என்று திகிலோடு கேட்டாள்.

"ஆம், அம்மா! இடது பக்கம் முழுவதும் மரத் தக்கையைப்போல் மரத்துவிட்டது. அதைச் சொஸ்தப் படுத்துவது என்பது எங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது. இனி, அவர், வாழ்க்கைப் பாதையை மறக்க வேண்டியதுதான்!" என்ருர் டாக்டர் வேகமாக!

"ஐயோ! பயந்தது போலவே வந்து வாய்த்துவிட்டதே!" என்று அலறி மூர்ச்சையானள் தேவி!

"பயந்ததுபோலவே மயக்கமும் வந்துவிட்டதே!" என்று அவளைத் தாங்கிப் பிடித்துப் படுக்க வைத்தார் டாக்டர்.

(தொடரும்)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்: இந்தா பாரு....நாயீ பேயின்னு சொன்ன எனக்கு கெட்டகோவம்வரும்தெரியுமா?

பீம்: கோவம் வந்தா என்னடி பண்ணிடுவே......கோவம் வந்தா, உங்க சிவன், மூணுவது கண்ணுலே எரிச்சிடுவாருன்னு எழுதி வச்சிருக்காளுங்களே, புளுகு புராணம், அதை போல என்னை எரிச்சிடுவியா என்ன? மூதேவி.....மூதேவி......மண்டையிலே என்னதான் இருக்குதோ தெரியலையே.......எக்கேடாவது கெட்டுபோ...

(கோபத்துடன் போகிருன்)

திரை விழுதல்.

(தொடரும்)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் போராடுவதற்கென்ன இந்த ஆட்சியாளர்கள்? ஏன் போராடவில்லை?

தைரியம் இல்லையா?

வீரம் இல்லையா?

போராட வேண்டும் என்ற அறிவுத் தெளிவு இல்லையா?

எப்படியேனும், தென்னட்டு மக்களைப் பசிக் கொடுமையிலிருந்து காப்பாற்றுவது நம் கடமையாயிற்றே என்பதை மறவாதிருக்கும் பண்பு இல்லையா?

என்ன இல்லை? ஏன் இக்கொடுமை? இன்னும் எத்தனை நாட்களுககு இந்த அரசியல் பஞ்சம்? என்று தீரும் இந்தப் பாலைவன நிலைமை? எத்தனை காலம் நீடிக்க முடியும் இத்தகைய பொறுப்பற்ற ஆட்சி? என்ன விடை கூறுகிருர்கள் பாரத புத்திரர்கள்? கூறுவதை விரைவாகக் கூறட்டும். மக்கள உள்ளம் கொதிப்படையுமுன்னே கூறட்டும். 'புரட்சித் தீ திக்கெட்டும் மூளும் முன்னே கூறட்டும், காங்கிரஸ் கோட்டை சட சடவெனச் சரிந்து வீழ்ந்து அது இருக்கும் இடத்திலே புல்முளைத்துப் போகுமுன்னே கூறட்டும்.

தொடர்கதை:

இன்பத்தின் எல்லை

[நா. அறிவழகன்]

(இரண்டாம் பாகம்)

இச் சம்பவம் தேவிக்குத் தலைவலியை மாத்திரமல்லாமல், ஒரு தலைவனையும் தேடித்தரச் செய்தது. டாக்டர் பெரியப்பனிடம் அவள் நோய்க்குத்தான் மருந்து கேட்டாள். அவரோ உடம்புக்கு மட்டுமன்றி உள்ளத்துக்கும் மருந்து கொடுத்துவிட்டார். ஆம்; வலித்த தலைக்கு ஒரு மருந்து! உடைந்த உள்ளத்துக்கு ஒரு உவகை!!

நாள் பல ஆயின :—

பத்திரிகைகளிலெல்லாம் ஒரு பரபரப்பூட்டக்கூடிய செய்தி! "பெரியார் இராமசாமி, 'திருப்பதி வெங்கடேஸ்வரர் 'பார்பர்—ஷாப்'பில் தலை முக மயிர்களை மழித்துக்கொண்டார்!" என்பதுபோல, ஒரு செய்தி வந்திருந்தால் எப்படியிருக்குமோ, அப்படித்தான் இருந்தது அந்தச் செய்தியும்! எதிர்பாராதது, நடவாதது; ஆனாலும், நடந்துவிட்டது!

இதோ அந்தச் செய்தி:

'நவயுக தெய்வத் தச்சன், காம வெறிக் கவிதையின் வாத்ஸ்யாயனர்— அருளப்பன், இளமை இன்பத்தை வெறுத்து ஒதுக்கி, ஆன்ம சாந்தி வேண்டித் துறவுக்கோலம் பூண்டு, சிவராமகிருஷ்ண வித்தியாலயத்திற் சேர்ந்தார்!'

இச் செய்தியைப் பிரசுரித்ததோடு மட்டும் பத்திரிகைகளின் பணி முடிந்துவிடவில்லை! சுவாமிகள் 'மான் தோல் மீது அமர்ந்து 'பத்மாஸனம்' செய்யும்போது எடுத்த படங்களையும் வெளியிட்டன! பத்தி பத்தியாக எழுதின, அவர் மனம் மாறியது குறித்து! படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலிலும் வல்லவர்களல்லவா, இந்தப் பத்திரிகைப் பிரமாக்கள்!

சுவாமி மௌனானந்தருடைய வாழ்க்கை வரலாற்றை வரைந்து தரும்படி வேண்டிக்கொண்டவர் அநேகர்! அவர்தம் சீடராக வேண்டும் என்று கருதிச் சேர்ந்தவர் ஏராளம்! ஆனால், அவர் விடுத்திருந்த அறிக்கை மட்டும் இப்படித்தான் இருந்தது: 'யாம் அமைதியை நாடியே ஆசிரமம் புகுந்தோம். மதத் தொண்டு செய்து மக்களை நல்லாற்றில் அழைத்துச் செல்வதே எமது குறிக்கோள். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையும் இதுதான்.......!'— நம்புவதற்கா நாட்டில் ஆட்கள் இல்லை? எவ்வளவோ பேர் நம்பத்தான் செய்தனர்!

அவர் உடல் துறவுக் கோலத்தைத் தழுவி நின்றது; ஆனால், உள்ளமோ துறவைப் பழிக்கும் பாவனையிலிருந்தது! மற்ற வுலகத்தை மறந்தது; செல்வ போகத்தைத் துறந்தது; ஆனால், அந்தத் 'தேவி'யை மறக்கமுடியவில்லை. அவர் தனித்திருக்க நேர்ந்தபோதெல்லாம் அவளைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தார்—அவரது உள்ளம் அதனைப் பீறி வெளியிட்டுக்கொண்டிருந்தது, பூந்தோட்டத்துச் சுழற் காற்றுப்போல! மன அமைதி காணுதற்கென்றே அவர் தமது வாழ்க்கை வரலாற்றை எழுதலானார்.

அவ் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியாகத்தான் தொடக்கத்தில் கண்டபடி, 'மது, மதம், மங்கை — போதைப் பொருள்கள்!' என்ற வாசகத்தை எழுதினார். மதுவும், மாதும் கடந்த கால நினைவுகள்! தற்போதோ மூன்றாவதான மதம்! ஆயினும், பழைய மூடைநாற்றம் உள்ளத்தில் சிறிதாகவேனும் வீசிக்கொண்டுதான் இருந்தது. மங்கை தேவி அவர் மனத்தை விட்டு மறைந்தாளில்லை—அவள் அவர் மனக் கண்முன் வந்து நின்று நர்த்தனமாடினாள். அழியாத 'காப்பிங் பென்சில்' எழுத்து அவள்! இவருடைய துறவற 'ரப்ப'ரால் அதைச் சிறிதேனும் அழித்துவிட முடியவில்லை என்பது என்னவோ உண்மைதான்! அவர் கொடிய மதுவை மறந்தே விட்டார்; ஆனால், மாதை மறக்கவில்லை! அவளும் அவர் மனத்தினின்றும் அகலவில்லை! ஆதலால்தான் அவர் எழுதினார், 'மது, மதம். மங்கை போதைப் பொருள்கள்!' என்று! அவ்வளவுதான் அவர்தம் கற்பனையும் எழுத்தும் தடைப்பட்டன!

திடீரென ஒரு 'ஞானோதயம்!'

"இல்லை, இல்லை!...தேவி— மது, மயக்கம், போதைப் பொருள் அல்ல; அமுதம்! அமுதம்!" — இவ்வாறு வாய்விட்டுக்கூறினார் சுவாமியார். துக்கம் அவர் நெஞ்சைத் துளைத்

தது; சித்திரவதை செய்தது; இருக்கை கொள்ளாமல் துடித்தார்!

‘தபோவனத்திற்குச் சென்றாவது காற்று வாங்கலாம்!’— இப்படியொரு எண்ணம் ‘படார்’ என அவர் நெஞ்சத்தே உதித்திருக்க வேண்டும். அதன் விளைவாகத்தானோ என்னவோ, ‘கட்டை நடைய’னில் காலைச் சேர்த்தார்......

ஆறாம் பகுதி

கார் விபத்து!

ஏதோ ஒரு பெரிய பயங்கர ஓசை—இடி இடித்தால், மரம் முறிந்தால, பாறை உருண்டால் ஏற்படுமே அதைப்போல! அதனோடு ஒரு கிச்சுக் குரல்—ஆம்; பெண்ணின் அலறல்தான்! சப்தம் கேட்டதுதான் தாமதம்—ஓசை வந்த திசை நோக்கி, ‘கட்டை நடைய’னில் காலைச் சேர்த்த காஷாயதாரி மௌனானந்தர், அடிக்கும் சூறைக் காற்றையும் பொருட்படுத்தாமல் ஓடினார்.

மடத்திற்கு அண்மையில் உள்ள மலைச்சாரலில்—பள்ளத்தில்—இருந்து புகை வந்துகொண்டிருந்தது. அவ்விடம் வந்துற்றார் மௌனானந்தர். ஒரு ‘சலூன்கார்’ விழுந்து நொறுங்கிக் கிடப்பதையும், அதற்குள்ளிருந்து சிலரை மீட்க—வெளிக் கடுத்த முயற்சிப்பதையும் மேலிருந்தவாறே நோக்கினார். காரிலிருந்து ஒரு ஆணும், பெண்ணும் வெளியேற்றப் பட்டனர். இருவருக்கும் பலமான காயம்—உருக்குலைந்து காணப்பட்டனர். பெண்ணின் முகம் நன்றாகத் தெரியவில்லை. அவள் தலையில்பட்ட காயத்திலிருந்து பெருகிய இரத்த வெள்ளம், அவள் முகம் எல்லாம் பரந்து உறைந்திருந்தது! இருவரும் புது மண மக்கள் போல் காணப்பட்டனர். காதற் பாதையிலே கார் விபத்து! இன்பபுரி ஏகி இளமை இன்பந் துய்க்க வேண்டிய மண மக்கள், துன்பபுரிப் பாதையில் காலை வைத்துவிட்டனர். அது எங்கெங்கெல்லாம் கொண்டு சேர்க்குமோ........? துன்பத்தின் முடிபு இன்பமாகத்தானே இருக்க வேண்டும்!

சாது மௌனானந்தருக்கு ஒன்றும் புலப்படவில்லை. அவர்கள் யாவர் என்பதும் தெரியவில்லை. இரத்தத்தைக் கண்ட மாத்திரத்தில் ஏற்பட்ட ஒருவித மயக்கம்—திக்பிரமை இன்னும் அவரைவிட்டு அகன்றதாமத் தெரியவும் இல்லை. மூக்கில் விரலை வைத்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்தார். திடீரென அந்த விரல் இடம் பெயர்ந்தது. அங்கு நின்றவர்களுள் ஒருவரை கை காட்டி அழைத்தார். அம் மனிதர் ஓடிவந்து சித்திரமனிதர் போல் சுவாமியார் முன் நின்றார். அவரை மடத்திற்குச் சென்று ஒரு வண்டி கொண்டு வருமாறு கட்டளையிட்டார். வண்டியும் வந்து நின்றது. அவ்விருவரும் அதில் ஏற்றப்பட்டனர். விரைந்து சென்ற வண்டி வித்தியாலயத்தின் வாசலில் போய் நின்றது. அங்கு, சுவாமியார், அவர்களுக்குத் தம்மாலான முதற் சிகிச்சைகளையெல்லாம் செய்து மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார். வண்டி கோவை அரசினர் மருத்துவ மனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

ஏழாம் பகுதி

பயமும், வாய்ப்பும்

மருத்துவ மனையில் தன்னுணர்வு இல்லாமல் மயங்கிக் கிடந்தாள் தேவி. திகில், சிறு ஊமைக் காயம், திடீர் அதிர்ச்சி—யாவும் அவளை அந்நிலைக்கு உள்ளாக்கின. மூன்றாவது நாள்தான் அவள் கண் திறந்தாள். கண்ணுக்கு நேரே வெள்ளை பூசிய ‘ரீப்பர்’கள் தோன்றின. பக்க வாட்டில் திரும்பிக் கண்ணைச் சுழற்றினாள். அப்பொழுதுதான் அவளுக்குத் தெரிந்தது, தான் படுத்திருப்பது மருத்துவ மனை என்பது. சிறிது சிறிதாக நினைவு உதித்துக் கொண்டிருந்தது. தானும் அவரும் நீலமலையில் இருந்து கோவை செல்லப் புறப்பட்டதும், உல்லாசமாகப் பேசிக் கொண்டு காரில் வரும்போது, வழியிடையில் சூறாவளிக் காற்றால் அந்தக் கார் பாதைதவறிப் பள்ளத்தில் விழுந்ததும் அவள் தம் நினைவுக் ‘காமிரா’விலிருந்து தெரியவந்தன!

“ஐயோ! எங்கே அவர்? எங்கே அவர்? கார் என்னவாயிற்று?” என்று வாய் விட்டலறினாள்.

அலறல் சப்தம் கேட்டு நர்ஸ் ஓடி வந்தாள். மீண்டும், ‘எங்கே அவர்? கார் எங்கே?” என்று அலறினாள். அந்த உணர்ச்சி வேகத்தில் எழுந்திருக்கவும் முயன்றாள்.

நர்ஸ் அவளைத் தாங்கிப் படுக்க வைத்து, “அப்படியே படுத்திரு, அம்மா! நான்போய் அவரை அழைத்துவருகிறேன்!” என்று கூறி விட்டு, எழுந்து போய்! யாருக்கோ ‘போன்’ செய்தாள்.

* * *

“மூந்தா நாள் கார் கேஸ் சார்...... அந்த அம்மா பேசுறாங்க...... ‘அவர்....... அவர்’ என்று கேட்டுக் கொண்டே இருக்கிறாங்க......”

“...............”

"எஸ் சார், அவரையே அனுப்புங்க!"

"...............”

"அது தான் நல்லது.......... அவரே வரட்டும்...அப்போது தான் விபரமாகச் சொல்லுவாங்க..........."

—இந்த உரையாடலைத் தேவி கேட்டுக் கொண்டுதான் படுத்திருந்தாள். "அவரே வரட்டும்" என்றதும் 'தன் கணவர் தான் வரப் போகிறார், அடிபடாமல் தான் இருக்கிறார்!' என்று அவள் மனம் எண்ணிற்று. அந்த எண்ணத்தின் அதிர்ச்சி, மீண்டும் அவளை மயக்கத்தில் ஆழ்த்தியது.

பத்து நிமிஷம் ஆயிற்று—

நர்ஸ் குறிப்பிட்ட 'அவர்'—மௌனானந்தர் அவள் பக்கத்திலே வந்து நின்றார். தேவி சிறிது கண் திறந்து பார்த்தாள். ஆனால், அடையாளம் மட்டுப்படவில்லை

"எங்கே அவர்? எங்கே அவர்? என் நாதர் எங்கே?" என்று மறுபடியும் அலறினாள்.

சுவாமியார் பயந்தார்; கண்ணீர் சொரிந்தார்; 'இழந்த பொருள்' என்ற சொற்கள் அவர் வாயிலிருந்து வெளிவந்தன! அங்கு வந்த டாக்டரிடம் ஏதோ சொல்லிவிட்டு 'மள மள' வென வெளியில் சென்றார்.

டாக்டர் தேவியின் நாடியைச் சோதித்துப் பார்த்தார். "இனி பயம் இல்லை!" என்ற சொற்கள், முத்துப் போல, ஒவ்வொன்றாக நிதானமாக அவர் வாயிலிருந்து வந்தன.

"டாக்டர் சார்! எங்கே அவர்? என்னுடன் காரில் வந்தாரே என் கணவர், அவர் எங்கே? அவர் கதி என்னவாயிற்று? நீலமலையிலிருந்து கிளம்பினாரே, என் காதல் கணவர், அவர் என்ன ஆனார் டாக்டர்? தயவு செய்து சொல்லுங்களேன்!" என்று கெஞ்சினாள். அவள் கண்களிலிருந்து பெய்த நீர் மழை அவள் தலையணையையும் குளிக்கச் செய்து விட்டது.

"உயிரோடு நலமாக இருக்கின்றார், அம்மா! நீங்கள் கவலைப் படவேண்டாம்!" என்று தேறுதல் கூறினார் டாக்டர். அவருடைய சாந்த முகம் தேவிக்குச் சிறிது சாந்தியை அளிக்கத்தான் செய்தது!

"டாக்டர் சார், கொஞ்சம் தயவு செய்யுங்களேன்! ஒரு முறை நானென் கண்ணால் அவரைக் காணும்படி தயவு செய்யுங்களேன்!" என்று மன்றாடினாள்.

சில நிமிஷங்கள் கடந்தன —

தள்ளுவண்டி ஒன்று வந்தது. அதில் பெருந்தேவி அமர்த்தப்பட்டு, ஆண்கள் இருக்கும் "ஸ்பெஷல் வார்டு"க்குள் கொண்டு போகப்பட்டாள். ஆறும் எண்ணுள்ள கட்டிலருகே வண்டி நின்றது. தேவி அந்தக் கட்டிலைப் பார்த்தாள். கட்டுகளோடு கட்டிலில் படுத்திருந்தது ஓர் உருவம். அடையாளம் புலப்பட வில்லை. "தேவி!" என்ற குரல், ஐந்தாறு மாடிகட்டு அப்பால் இருந்து, தெருவில் போவோரைக் கூப்பிடுவதைப் போல, கிணற்றுக்குள்ளிருந்து அழைப்பதைப் போல அந்த நோயாளியின் வாயிலிருந்து வந்தன. உடனே தேவி உணர்ந்துகொண்டாள், அவர் தன் கணவர் பெரியப்பன்தான் என்று.

"ஸ்வாமி! இதென்ன கோலம்?" என்று கேட்டாள் தேவி. நர்சுகள் அவளை இறுகப் பிடித்துக் கொண்டிருந்ததால், எட்டிப் பாயமுடியாது தடைப்படவே, மெதுவாக அவரை அணுகினாள்.

மீண்டும் மயக்கம். உணர்வு வந்ததும் அவருடன் பேச்சுக் கொடுப்பதும், அழுவதும் நல்லதல்ல என்று எண்ணித் தன் துயரத்தை அடக்கிக் கொண்டு அவரைக் கண்கொட்டாது பார்த்தாள் சில நிமிஷங்கள்.

பிறகு, பக்கத்தில் நின்றிருந்த டாக்டரிடம், "வேறெங்காவது அடிபட்டதா? முறிவு உண்டா? முகத்தில் மட்டுமா காயம்!" என்று மெதுவாகப்

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிடத் தோழர்களே!

நீங்கள் போர்வாளின் சந்தாதாரர் ஆகிவிட்டீர்களா?

போர்வாளின் வளர்ச்சி திராவிடர் இயக்கத்தின் வளர்ச்சி; திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி; பகுத்தறிவு எண்ணங்களின் வளர்ச்சி. எனவே போர்வாள் சந்தாதாரர் ஆவது உங்கள் கடமை அல்லவா?

ஓராண்டு சந்தா ரூ. 6 8 0

6 மாத சந்தா ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

இத்தாலிய நாட்டு இன்னிசைக்கவி

தங்கவேலர்

"ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையும் ஒரு அற்புத இலக்கியமே"

"அவ்விதம் தன் வாழ்க்கையிலும், பிறர் வாழ்க்கையிலும் பின்னிப் பிணைந்து செல்லும் பல சுவையான நிகழ்ச்சிகளை அனுபவத்தில் சுவைப்பவனே உண்மையான கவிஞன் ஆகிறான்"

"அனுபவத்தை ஒதுக்கி, வெறும் கற்பனைக் கற்களாலேயே கட்டப்படும் எந்த இலக்கியமும் இதுவரை அமர இலக்கியமாக நிலைபெறவில்லை"

..."ஒரு கவிஞனோ, கதாசிரியனோ என்றால், அவன் வாழ்க்கையிலேற்பட்ட பல ஏற்ற, இறக்கங்களை; தெளிவு சுளிவுகளைத் தன் மனப்பண்புக்கு ஏற்றவாறு பாகுபடுத்தித் தன் சொந்த மனத்தீர்வை அடிப்படையாக்கிக் கொண்டு, கொஞ்சம் கற்பனையையும் குழைத்து நிகழ்ச்சிப் பின்னலிட்டுச் சிருஷ்டிப்பதுதான் உண்மையான இலக்கியக் கோயிலாகும் என்பது தீர்ந்த முடிவாகிறது..."

...இதுபோன்ற சில கருத்துக்களை எழுத்தாளரொருவர் சின்னாட்களுக்கு முன்பு ஏடொன்றிலே தீட்டிக் காட்டியிருந்தார். இது எந்த அளவுக்கு உண்மையாக அமைகிறது என்பதை, உலகப் புகழ்பெற்ற பல இலக்கியங்களை வடித்த ஆசிரியர்களின் வாழ்க்கையும், அந்த வாழ்க்கையிலே தாங்கள் கண்டறிந்த அனுபவங்களைத் தங்கள் ஏடுகளிலே புகுத்திய நிகழ்ச்சியும் நமக்கு நன்றாக விளக்கிக் காட்டுகின்றன!

அனுபவ உண்மைகள் என்ற அஸ்திவாரத்தின் மேல் கட்டப்படும் இலக்கிய மாளிகைதான் பலமுள்ளதாக அமையும்.

இந்த இலக்கிய மாளிகையைச் சுற்றிப்பூசப்பட்டகற்பனை வர்ணம் தான் மாளிகைக்கு மதிப்பளிக்கிறது. இந்தக் கருத்தை சோமூர் அலக்சாந்தரின் "அழகால் உலகம் விரிந்து வளருகிறதென்றால் அழகை ஆக்குவது கற்பனையின் கடமையாம்" என்ற தெளிவுரை மெய்ப்படுத்துகிறது.

இன்று உலகம் எண்ணுகிறதே ஒப்பற்ற இலக்கியங்கள் என்று, அந்த இலக்கியங்களில் பெரும் பகுதி சோகரசம் ததும்பியதாகயிருந்தால், அது அந்த இலக்கிய ஆசிரியர் நடத்திய சோக வாழ்க்கையின் தொகுப்பு! இல்லை அது இன்பமயமாக முடிக்கப்பட்டிருந்தால் அந்த நூலாசிரியர் அனுபவ வாயிலாகக் கண்டறிந்த இன்பக் களஞ்சியமாக இருக்கும் — அந்த இலக்கியம்.

இப்படி நாம் குறிப்பிடுவது வாழ்க்கை அனுபவத்தையும், கற்பனையையும் கலந்து இலக்கியம் தீட்டித்தரும் இலக்கியாசிரியர்களைப்பற்றியே! இது குறித்தே மகாகவி காட்டே,—ரூஸ் என்ற ஓவிய நிபுணர் தீட்டிய செம்மறி ஆடுகளைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டுக் கூறினாராம், "இவ் விலங்குகளைக் காணும்போதெல்லாம் என் மனத்தில் ஒருவகைத் துணுக்கம் ஏற்படுகிறது. அவற்றின் பொது நிலையும், எல்லைக்கு உட்பட்ட அறிவும், மந்தமான நோக்கும் என் மனத்தை உருக்கி அவற்றினிடம் கருணை கொள்ளுமாறு செய்கின்றன. பல சமயம் நானே ஓர் ஆடாகிவிடுவேனோ என்ற அச்சமும் என் மனத்தில் தோன்றுகிறது. இவ்வோவியத்தைத் தீட்டிய ரூஸ் முதலில் தாம் ஒரு ஆடாக மாறிய பின்னரே இவ்வளவு உண்மையுடன் இதனைத் தீட்டி இருத்தல் கூடும்."

மகாகவி காட்டே மட்டும் இப்படிக் கூறிவிடவில்லை. புகழ்பெற்ற ஆங்கிலக் கவிச்செல்வன் கீட்ஸ், "கவலையின்றிப் பறந்து திரியும் சிட்டுக்குருவி எனது பலகணியின் வழியே வரின், யான், என்னை மறந்து சிட்டாகவே மாறிவிடுகிறேன். மேலும் சிறு பரற்கற்களையும் கொத்தத் துவங்கிவிடுகிறேன்." என்று கூறுகிறார்.

* * *

இழந்த சுவர்க்கத்தை எழுதிய மில்டன்! ஓதோ வைத்தீட்டிய கீட்ஸ், "வெள்ளைக் கப்பலை" வடித்த ரொசட்டி, இன்னும், கூல்ரிட்ஜ், வோர்ட்ஸ்வொர்த், பைரன், ஷெல்லி...இவர்களெல்லாம் அனுபவத்தையும், கற்பனையையும் கலந்து இலக்கியம் சமைத்தவர்கள்தான்!

இப்படித் தம் உள்ள உணர்ச்சிகளைத் தங்களது இலக்கியத்திலே புகுத்திக் காட்டியவர்களிலே, இத்தாலிய நாட்டு இன்னிசைக் கவிஞன் தாந்தேயும் ஒருவன்!

தாந்தே கவிதை எழுதிப் பழகும் பருவத்திலே அழகி பீட்ரிஸ் (BEATRICE) அவன் உள்ளத்தைக் கவர்ந்தாள். பீட்ரிஸின் மொழி, பேசும்விழி, தாந்தேயை அவளுக்கு அடிமையாக்கியது! நாளடைவிலே அவளோடு தொடர்பேற்படுத்திக்கொண்டான் தாந்தே. அவளும் இவனை மணக்க ஒப்பினாள். மணநாள் நெருங்கியது—தானும், பீட்ரிஸும் நடத்தப்போகும் இன்பப் பயணத்தை எண்ணியே தாந்தேயின் உள்ளம் துள்ளிக்கொண்டிருந்தது. ஆனால் அதற்குள் யாரோ கட்டிவிட்ட வதந்தி பீட்ரிஸுக்கு எட்டிவிட்டது. யாரோ ஒரு நாடகப் பெண்ணோடு தொடர்புகொண்டு சுற்றித் திரிகிறான்...என்ற வதந்தி பீட்ரிஸின் உள்ளத்திலே வெறுப்பையூட்டி, தாந்தேயைத் தான் மணக்க இருந்த முடிவை மாற்றிவிட்டது! தாந்தேயிடமும் இந்த நிலைமையை நேரிலே விளக்கிக் கூறி மறுத்துவிட்டாள்.

தாந்தே புயலில் சிக்கிய படகானான். அவன் உண்மையிலேயே எந்த நாடகப்பெண்ணையும் காதலிக்கவில்லை — பீட்ரிஸைத் தவிர. ஆனால் அவன் உள்ளத்திலே ராஜ

நடை போட்டு உலவிய பீட்ரிஸ் உதாசீனம் செய்துவிட்டாள், யாரோ கட்டிவிட்ட வதந்தியை நம்பி.

வதந்திக்குப்பின் பாயும் புலியாகக் காட்சிதந்த அந்தப் பாவையிடம் என்ன சமாதானம் கூறியும் அவள் ஒப்பவில்லை. இறுதியிலே தன் இன்பக் களஞ்சியத்தை இழக்கவேண்டிவந்தது தாந்தேவுக்கு!...வேறு ஒருவனை மணந்துகொண்டாள் பீட்ரிஸ். அவள் பிரிவு ஏற்படுத்திய ஏக்கம்...அதை என்றும் தாந்தேயால் மறக்க முடியவில்லை.

தன்னோடு சிரித்துப் பேசிய அந்த சில நாள், அவன் உள்ளத்திலே ஒரு மயக்கத்தைத் தெளித்து சித்ரவதை செய்தது. ஏக்கத்தை மறக்க அப்போது "விடாநியூவா" (VITANEUOVA) என்ற காவியமொன்று தீட்டினான் தாந்தே! அந்தக் காவியத்திலே தன் அனுபவத்தையும், உள்ள உணர்ச்சிகளையும் கற்பனையோடு கலந்து...பீட்ரிஸை, கதாநாயகியாக சிருஷ்டித்து உலவவிட்டான்.—தன் இன்ப வாழ்க்கையை இருண்டுவிடச் செய்த அந்த இழந்தகாதலை அப்படியே படம் பிடித்துக் காட்டினான் விடாநியூவா காவியத்திலே!

ஒரே காவியத்தில் மட்டும் தன் மனநிலையை விளக்கிவிடவில்லை தாந்தே. காமிடியா (COMMEDIA) என்ற மற்றொரு காவியம் தீட்டி அதில், நரகம் என்ற ஒரு பகுதியைப் பிரித்து அங்கே, தன் நொந்த உள்ளத்தைத் திறந்துகாட்டுகிறான் தாந்தே. தாந்தே நொந்த உள்ளத்தோடு தீட்டிய அந்த காமிடியா இன்று உலக இலக்கியச் சந்தையிலே முதலிடம் பெற்று விளங்குகிறது. தாந்தேயின் காலத்துக்குப்பின், இத்தாலியில் எவ்வளவோ காவியங்கள் தோன்றியுங்கூட இன்றும் காமிடியாவுக்கு முதலிடம் கொடுத்துக்கொண்டுதானிருக்கின்றனர், இத்தாலிய நாட்டுக் கலை உள்ளம் படைத்தோர்.

காமிடியா, இன்று பல மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது! தாந்தேயின் காலத்திலே அவன் காமிடியாவின் ஒரு பகுதியான, நரகத்தைப் படித்தவர்கள் தாந்தே வீதியிலே உலவும்போது, அவனை சுட்டிக் காட்டிக் கொண்டு பேசுவார்களாம். "இதோ நரகத்தில் கஷ்டப்பட்டவன்" என்று!

அந்த அளவிலே அமைந்திருந்தது அவன் வாழ்வு. பீட்ரிஸ் இவனை மணக்க மறுத்ததிலிருந்து, இவன் மனப்போக்கே மாறிவிட்டது அன்றிலிருந்து காவியங்களைத் தீட்டிக்கொண்டு, தன் மனப்போரை அடக்க எண்ணினான் தாந்தே—ஆனால், அதோடு அவனைச் சுற்றியிருந்த சூழ்நிலையின் தொல்லையும் வாட்டவே பெரிதும் துயருற்றான்.

தாந்தே வேறு ஒரு பெண்ணை மணந்துகொண்டான் என்றாலும், பீட்ரிஸின் நினைவு இவனை விட்டபாடில்லை. தனது மகளுக்கு—பீட்ரிஸ்—என்ற தனது பழைய காதலியின் பெயரையே சூட்டினான். பாதிரி ஒருவர் வீதியிலே உலவிக்கொண்டிருந்த தாந்தேயை அழைத்துக் கேட்டாராம் "உனக்கு என்ன வேண்டு"மென்று! அதற்கு தாந்தே கூறினானாம், எனக்கு அமைதிதான் இப்போது தேவைப்படுகிறது...என்று!

தனது மனப்போரை அடக்க அமைதி அமைதி, என்று அலைந்து திரிந்தான் தாந்தே. அந்த அமைதியைப் பெறுவதற்காகவே காவியங்கள் பல தீட்டினான். அதிலும் அவன் அமைதி பெற்றவனாகத் தெரியவில்லை. "காமிடியா" காவியத்தைப் பற்றி தாந்தே ஓரிடத்தில் குறிப்பிடும்போது "உடலைப் பல வருட உழைப்பால் மெலியச் செய்த கவிதை" என்று கூறி, காவியம் தீட்டப் புகுந்தும் தன் மனம் அமைதி பெறவில்லை என்பதை விளக்கிக் காட்டுகிறான்.

தாந்தே மாடிவீட்டு வாசத்திலே வளர்ந்தவன். அவன் தந்தை பணக்காரராக இருந்ததால் இவன் வாலிபப்பருவம் வரை வேலை இன்னதென்று அறியாமல் வளர்ந்து வந்தான். தனது வாலிப காலத்தின் பிற்பகுதிதான் சிரமத்தைத் தந்தது அவனுக்கு. பல கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன தாந்தேயை. தாந்தேக்கு 48—வயதாகும்போது வாழ்க்கையின் வேதனை தாங்க முடியாதவனாக இருந்தான். அப்போது தான் காமிடியாவைத் தீட்டினான். தனது 56-வது வயது வரை, அதாவது 8 வருடங்கள் வரை ஆகியதாம் இந்தக் காவியத்தைத் தீட்டி முடிக்க!

தாந்தே காலத்தில் புகழ் பெற்று விளங்கினான் "அல்பர்டினோ முசார்டோ" என்ற இத்தாலியக் கவிஞன். அவன் அடைந்துகொண்டிருக்கும் பெரும் புகழைப் போலவே தானும் தனது காவியங்களும் புகழ்பெற வேண்டுமென்று எண்ணினான் தாந்தே! அப்போது பிளாரன்ஸ் நகரில் கலகம் விளைந்தது. தாந்தேயின் கட்சி தோல்வியடையவே, தாந்தே தன் சொத்து முழுவதையும் பறிகொடுத்து விட்டு நாடுவிட்டு நாடு ஓடினான். தாந்தே தன் சொந்த நாட்டில் மீண்டும் நுழைந்தால், உயிருடன் எரித்துவிடவேண்டுமென உத்தரவுகள் பிறந்தன அரசியலாரிடமிருந்து!

தன் சொந்த நாட்டில் வாழ்வதற்குக் கூட வசதியில்லாத முறையிலே தாந்தே ஓடினான் நாட்டுக்கு நாடு. இறுதியிலே ராவன்னா நகரில் தங்கினான். அவனது இறுதிக் காலமும் அங்கேயே முடிந்தது.

தாந்தே இறக்கும் போது அவன் வயது 56. அவன் உடல் மிகுந்த மரியாதையோடு ராவன்னா நகரில் அடக்கம் செய்யப் பட்டபோது, தாந்தேயின் கல்லறையில் அவன் முன்னர் விரும்பிய படியே "என் சொந்த ஊரில் புகமுடியாமல் தடுக்கப்பட்ட தாந்தேயாகிய நான் படுத்திருக்கிறேன்" என்று கல்லில் வரையப் பட்டது.

இந்த ஒரு நிகழ்ச்சியே, தாந்தே மரணப் படுக்கையில் இருக்கும் வரை வேதனையோடு விளையாடிக் கொண்டிருந்தான் என்பதைக் காட்டுகிறது.

தாந்தே மறைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவன் கல்லறையிலே செதுக்கப் பட்டிருந்த எழுத்துக்கள் வேதனையை அளித்தனவாம் இத்தாலிய நாட்டினருக்கு! அப்போதுதான் கவிஞனை நாட்டைவிட்டு ஓட்டிய தவறை உணர்ந்தனராம். உலகத்தின் பழிச்சொல்லுக்கு அஞ்சி தாந்தே பிறந்து வளர்ந்த பிளாரன்ஸ் நகரிலே, ராவன்னா நகரில் கட்டப் பட்டிருந்த கல்லறையைப் பெயர்த்து எடுத்து வந்து, அழகானதொரு மண்டபம் கட்டி அதிலே தாந்தேயின் கல்லறையை அமைக்க முயற்சித்தனராம் இத்தாலி நாட்டு மக்கள்...... கஞ்சிக்கும் கதியற்று மறைந்த கவிஞர்களுக்கு மணி மண்டபம் கட்டுபவர்களைப் போல!

தாந்தே 1265-ம் வருடம் பிறந்து — 1331ம் வருடம், செப்டம்பர் மாதம் 13-ம் தேதி மறைந்தான்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து கொண்டிருந்த மோட்டார் வண்டி என் வண்டிமீது மோதிற்று. வண்டி கவிழ்ந்து, என் இடது காலொடிந்து நொண்டியானேன். இன்று நான் பிச்சைக்காரன்.

சற்றுமுன் டிராம் வண்டியில் சென்றானே ஒரு பெண்ணோடு, அவன்தான் என் ஒரே மகன். கருத்தரித்த என் மனைவியும், கருவிலிருந்த சிசுவும் என்ன ஆனார்களோ எனக்குத் தெரியாது. என் மகனை அவன் காதண்டை இருந்த ஒரு தழும்பைக் கொண்டு அடையாளம் கண்டுபிடித்தேன். அவனும் என்னைத் தந்தைபோல் இருக்கிறேன் என்ற சந்தேகத்தால் தான் கூர்ந்து கவனித்திருக்க வேண்டும். அந்தப் பெண் அவன் மனைவியாக இருக்கலாம். சாமி! என்னை என் மகனிடம் சேர்ப்பீர்களா? முடியுமா?" என்று கெஞ்சுதலாகக் கேட்டுத். தன் சோகக் கதையை முடித்தான் கிழவன்.

ஆடாது, அசையாது நான் கேட்டுக்கொண்டிருந்த அவன் பரிதாபக் கதையைக் காட்டிலும் அவனுடைய கடைசிக் கேள்வி என்னை உலுக்கிற்று. என் உள்ளம் உருகியது.

சற்றுநேரம் யோசனையிலிருந்த நான், "தாத்தா! நீ கவலைப்படாதே. நான் உன்னைப் பிறகு சந்திக்கிறேன்" என்று சமாதானம் கூறிவிட்டு வீடுசேர்ந்தேன்.

அன்றிரவு நான் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். என் நெஞ்சத்தில் கிழவனின் சோகக் கதை, அவனது கடைசிக் கேள்வி, இவை நிழலாடின. நான் யோசனையில் ஆழ்ந்தேன். கிழவனின் மகனை எங்கே கண்டுபிடிப்பது என்ற கவலையில் என் உள்ளம் தோய்ந்தது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இரவு மணி 11 இருக்கும். மாடியிலிருந்த என் ஜன்னல் கதவைத் திறந்து வெளியே நோக்கினேன். எங்கும் அமைதி. தெருவில் ஒருவர் இருவர் போய்க்கொண்டிருந்தார்கள். கிழவனுக்குத் தந்த உறுதியை எப்படி நிறைவேற்றுவது என்று எண்ணினேன். யாரோ கலகல வென்று சிரிக்கும் ஒலி கேட்டது. எதிர் வீட்டு மாடியில் யாரோ இருவர் நாற்காலிமீது உட்கார்ந்து மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தார்கள். நெடுநாட்களாக யாரும் குடிவராது மூடிக்கிடந்த அந்த வீட்டில் யாரோ பேசுவது தெரியவே அவர்களை சற்று வியப்போடு கவனித்தேன். ஆம், அவர்களேதான் — நான் நொண்டிக் கிழவரோடு நின்றிருந்தபோது பார்த்த 'இளம் காதலர்களே'தான். என் உள்ளம் பூரித்து எழுந்தது. அளவிடமுடியாத வெற்றிபெற்ற ஒருவனுக்கு உண்டாகும் மனமகிழ்வும், அமைதியும் எனக்கு ஏற்பட்டன. நான் பிறகு நிம்மதியாகத் தூங்கினேன்.

அடுத்தநாள் காலை படுக்கையை விட்டு எழுந்தேன். அன்று எனக்கு விடுமுறை. காலையில் என் வேலைகளை முடித்துக்கொண்டு எதிர் வீட்டுக்குப் போனேன். கதவு தாளிட்டு இருந்தது. மெல்லக் கதவைத் தட்டினேன். பத்து வயது சுமாருக்கு உள்ள ஒரு குழந்தை ஓடிவந்து கதவைத்திறந்தது. நான், "யாரும் இல்லையாம்மா, குழந்தே" என்றேன்.

"அண்ணா" என்று அந்தச் சிறுமி கூப்பிட்டாள். ஒரு வாலிபர் வந்தார். நான் அவரை வணங்கினேன்.

"உட்காருங்கள். நீங்கள் யார்? எனக்குத் தெரியவில்லையே!" என்றார்.

நான் "ஆமாம், உங்களுக்கு என்னைத் தெரியாதுதான். உங்கள் தந்தைக்கு என்னைத் தெரியும்" என்றேன்.

அவர் ஆழ்ந்த சந்தேகத்தோடு என்னைப் பார்த்தார். அவர் மேலும் பேசுவதற்குமுன்பு, "நேற்று இரவு என்னைப் பார்த்த நினைவு இருக்கிறதா உங்களுக்கு" என்றேன்.

"உங்களை நேற்று இரவு எங்கோ பார்த்த ஞாபகம் இருக்கிறது" என்றார்.

"நண்பரே! நேற்று ஒரு நொண்டிக் கிழவனுக்கு பிச்சைக் காசு போட்டீர்களே அங்கேதான் நான் உங்களைப் பார்த்தேன். அந்தக் கிழவர் தான் உங்கள் தந்தை" என்றேன்.

அவர் திகைத்துப் போனார்.

பின்னர் அவரிடம் அந்தக் கிழவர் கூறிய கதையைச் சொன்னேன். உருக்கத்தோடு நான் கூறியதைக் கேட்ட அவர், "நண்பரே, உங்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கிழவரை நாளைக்கே இங்கு அழைத்து வந்து விடுங்கள். அவர் செய்த தவறை நான் பெருமிதத்தோடு மறந்து விடுகிறேன்" என்றார். அவர் முகத்தில் அமைதி எல்லை மீறித் தவழ்ந்தது.

அப்போது அந்தச் சிறுமி எங்களுக்குக் காப்பி கொண்டு வந்தாள். அவளைப் பார்த்து, "நண்பரே! இவள்தான் என் அருமைத் தங்கை. இவளைப் பெற்று ஓராண்டுக்குப் பின் என் தாய் மாண்டாள். என் தாய் உயிருடனிருக்கும் போதே நான் மணம்செய்து கொண்டேன். என் மனைவியின் பெயர் பாலா" என்றார் சிரித்துக் கொண்டே.

நான் "நண்பரே! உன் தாய் எப்படி இறந்தார்கள்" என்று கேட்டேன்.

அவர் கூறினார் அந்தத்துன்ப வரலாற்றை.

"அன்பரே! என் தந்தை என் தாயை விட்டுப் பிரியும்போது நாங்கள் கௌரவமான நிலையில் இருந்தோம். சாதாரணமான குடும்பம் தான். அப்போது என் தாய் கருத் தரித்திருந்தாள். எனக்குப் பதினைந்து வயதிருக்கும். தாயும் சேயுமாகப் போராடி நாங்கள் நாட்களைக் கடத்தினோம்.

ஊர் வாய் எரிகிற எங்கள் குடும்ப வாழ்வில் எண்ணெயை ஊற்றிற்று. என் தாய்க்கு 'வழுக்கி விழுந்தவள்' என்று ஊர்வாய் பட்டம் கட்டிற்று. நான் உள்ளம் உடைந்தேன். ஊர் வதந்தி என் தாயின் காதுகளுக்கு எட்டு முன்பு, நாங்கள் எங்கள் சொந்த ஊராகிய மதுரையைவிட்டு வெளியேறினோம். திடீரென்று ஒருநாள் சென்னையில் எனக்கு வேலை கிடைத்திருப்பதாகக்கூறி என்தாயைச் சென்னைக்கு அழைத்து வந்து விட்டேன். என் அன்னைக்கு என் மனதிலிருந்த எண்ணம்—அவளைச் சென்னைக்கு அழைத்து வந்த காரணம்—அவள் இறக்கும் வரை தெரியாது. நல்ல

(7-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)